# லாஹுகல பிரதேச சபை
# அம்பாறை மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2011 ஆகஸ்ட் 03 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டினது நிதிசார் கூற்றுக்கள் 2010 ஜனவரி 14 ஆந் திகதியன்றும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் அமைய லாஹுகல பிரதேச சபையின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான லாஹுகல பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 கணக்காய்விற்கான சான்றின்மை

**பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2010 டிசெம்பர் 31 ஆந் திகதியளவில் 2 கணக்காய்வு ஐயவினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 447,250 ஆகும்.

### 1.3.1 இணங்காமை

கீழே காணப்படும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | | இணங்காமை |
|---|---|---|
| **(அ)** | **1988 பிரதேச சபைகள் (நிதியும் நிர்வாகமும்) விதிகள்** | |
| (i) | 13 ஆம் விதி | சான்றுறுதிப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் பிரதி ஒன்று நிதியாண்டு ஆரம்பமாவதற்கு முன்னரே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |
| (ii) | 17 ஆம் விதி | பி.ச 21 க்கமைய அடியிதழ்சேர் புத்தகங்களின் பதிவேடு ஒன்று பேணப்பட வில்லை. |
| (iii) | 29 ஆம் விதி | சேகரிக்கப்படும் பணம் நாளாந்தம் வைப்பிலிடப்படவில்லை. |
| (iv) | 64 ஆம் விதி | குறித்த கணக்கீட்டு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் நாளாந்தம் பரிசீலிக்கப்படவில்லை. |
| (v) | 168(1) ஆம் விதி | முன்னைய ஆண்டிற்கான கணக்குப் பொழிப்பினது பிரதி ஒன்று பெறுவனவு மற்றும் கொடுப்பனவு உறுதிச்சான்றிதழ் வகைப்படுத்தப்படும் கூற்று ஒன்றுடன் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வில்லை. |

## 2. நிதி, செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் வருவாயிலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 1,437,550 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் வருமானத்திலும் கூடிய மீண்டுவருஞ் செலவினம் ரூபா 3,070,234 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன. எவ்வாறாயினும், சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் சரியானவை அல்ல என உறுதிசெய்யப்பட்டது.

| | வருவாய் விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்டது | உள்ள படியானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | குத்தகை வாடகை | 17 | 17 | - | 945 | 313 | 632 |
| (ii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 117 | 91 | 26 | 85 | 65 | 20 |
| (iii) | பிற வருவாய் | 3,506 | 3,506 | - | 450 | 716 | - |

### 2.2.2 நீதிமன்றத் தண்டப் பணம்

பல்வேறு கட்டளைச் சட்டங்களின் கீழ் மஜிஸ்டிரேட் நீதிமன்றத்தால் 2010 டிசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு தலைமைச் செயலாளர்/ மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட ரூபா 442,500 தண்டப்பணமானது சபையால் பெறப்பட வேண்டியிருந்தது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

புதிவாளர் நாயகத்தின் 2007, 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளுக்கான ரூபா 179,000 முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3 செலவின அமைப்பு

சபையின் மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவினம் வேறுபாடுகளுடன் கீழே காணப்படுகின்றது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | வரவு,செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ள படியானது | வேறுபாடு | வரவு,செலவுத் திட்டமிடப்பட்டது | உள்ள படியானது | வேறுபாடு |
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** | **ரூபா. 000** |
| ஆளுக்குரிய வேதனம் | 6,206 | 3,897 | 2,309 | 5,410 | 3,954 | 1,456 |
| ஏனையவை | 1,391 | 1,154 | 237 | 1,702 | 4,222 | (2,520) |
| உபமொத்தம் | 7,597 | 5,051 | 2,546 | 7,112 | 8,176 | (1,064) |
| மூலதனச் செலவினம் | 6,080 | 5,278 | 802 | - | 5,779 | (5,779) |
| நிகர மொத்தம் | 13,677 | 10,329 | 3,348 | 7,112 | 13,955 | (6,843) |

======= ====== ======= ======== ======= ======

## 2.4 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை**

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| ஊழியர் தரம் | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது |
|---|---|---|
| நிறைவேற்று தரம் | 01 | - |
| இரண்டாம் தரம் | 08 | 04 |
| ஆரம்ப நிலை | 13 | 12 |
| பிற (சமயாசமய, தற்காலிக) | - | - |
| | 22 | 16 |

## 2.5 சொத்து முகாமைத்துவம்

**பொருட்கணிப்புக்குள்ளாகாத சொத்துக்கள்**

2010 ஆம் ஆண்டிற்கான பொருட்கணிப்பு மேற்கொள்ளப்படவில்லை.

## 2.6 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) பிரதேச சபை பேணவேண்டிய புத்தகங்கள் முறையாகப் பேணப்படவில்லை. கணக்காய்வுத் தேவைகளுக்கெனத் தகவல்களைப் பெறும்போது தகவல்களை வழங்குவதில் நீண்ட தாமதம் நிலவியது.

(ஆ) பிரதேச சபையின் பதவியணியில் உதவிக்கான 4 ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர். முறைப்படி வேலைப் பகிர்வு இடம்பெறவில்லை. நாளாந்தக் கடமைகள் முறைப்படி

நடவாதபோதும், உதவி உள்ளூராட்சி ஆணையாளரால் இது தொடர்பாகக் கவனஞ் செலுத்தப்படவில்லை.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதிய உள்ளகக் கணக்காய்வு இடம்பெறவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. கணக்கீடு

ii. நிதிக் கட்டுப்பாடு